This Question Paper contains 3 Printed Pages.]

01A(A)

TAMIL, Paper-I

(First language)

Parts A and B

Time : 2 hours 45 minutes] **[Maximum Marks : 40**

குறிப்பு :

1. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்களும், விடைகளை எழுதிட 2 மணி 30 நிமிடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளது.
2. பகுதி – 'அ' விற்கான விடைகளை விடைத்தாளில் மட்டுமே எழுத வேண்டும்.
3. பகுதி – 'ஆ' விற்கான விடைகளை அதே வினாத்தாளில் எழுதி, பகுதி – 'அ' விடைத்தாளுடன் இணைத்து தர வேண்டும்.

Part-A

Time : 2 hours **Marks : 30**

I. புரிந்து கொள்ளுதல் – விடையளித்தல் **(12** மதிப்பெண்கள்)

அ. கீழ்க்காணும் செய்யுளுக்குப் பதவுரை எழுதுக. *1×4=4*

1. அருவினை என்ப உளவோ கருவியாற்
காலம் அறிந்து செயின்.

(அல்லது)

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை.

அ. கீழ்க்காணும் செய்யுளை நிரப்பி, கருத்துரை எழுதுக. *1×4=4*

2. இலவச நூற் கழகங்கள் .....
.....
.....
..... தாபிப்போம் வாரீர்!

(அல்லது)

நல்லதாய் .....
.....
.....
..... தீண்டிற் றன்றே.

அ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து நான்கு வினாக்களை தயார் செய்க. *4×1=4*

இராமலிங்கர் அருளிய பாடல்கள் அருட்கருணை நிறைந்தவை. ஆறு தொகுதிகள் கொண்ட இவரது பாடல்களைத் திருவருட்பா என மக்கள் போற்றுகின்றனர். இவர் உருவ வழிபாட்டை நீக்கி, ஒளி வழிபாட்டை மக்கள் பின்பற்றச் செய்தார். அதற்காகவே வடலூரில் சத்திய ஞான சபையை நிறுவினார். மேலும் மக்கள் அறியாமை நீங்கி அறிவு ஒளி பெற அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார். இதனால் தான் பாரதியார் இவரைப் புதுநெறிகண்ட புலவர் என்று போற்றினார்.

3.

4.

5.

6.

II. சுயமாக எழுதுதல் – படைப்பாற்றல் **(18 மதிப்பெண்கள்)**

ஈ. கீழ்க்காணும் சிறுவினாக்களுக்கு நான்கு அல்லது ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக. *4×2=8*

7. கலித்தொகை – குறிப்பு எழுதுக.

8. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல் வழித் தொகுத்து எழுதுக.

9. மனித நேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

10. உழவுத் தொழில் குறித்து எழுதுக.

உ. கீழ்க்காணும் நெடுவினாக்களுக்கு பன்னிரண்டு வாக்கியங்களில் விடை எழுதுக. *2×5=10*

11. புலி வசனித்த படலத்தின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்து எழுதுக.

12. தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதை விளக்குக.

(அல்லது)

தமிழ்மொழியின் செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை மட்டும் விளக்குக.

This Question Paper contains 4 Printed Pages.]

01A(B)

TAMIL, Paper-I

(First language)

Parts A and B

Time : 2 hours 45 minutes] **[Maximum Marks : 40**

குறிப்பு :

1. கொடுக்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைக்கான எழுத்தை அடைப்புக்குறிக்குள் மட்டுமே எழுத வேண்டும்.
2. பகுதி – 'ஆ' விற்கான விடைகளை இவ்வினாத்தாளில் மட்டுமே எழுத வேண்டும்.
3. பகுதி – 'ஆ' வினாத்தாளை பகுதி – 'அ' விடைத்தாளுடன் இணைத்து தர வேண்டும்.

Part-B

Time : 30 minutes **Marks : 10**

III. மொழித்திறன் **(10** மதிப்பெண்கள்)

(ஊ) கீழ்க்காணும் வினாக்களுக்கு உரிய விடையைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய எழுத்தை அடைப்புக்குறிக்குள் எழுதவும். *20× ½ =10*

1. 'பொதிந்த மெய்மயி ரெண்கினங் களுமரைப் போத்தும்' – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் [ ]
   (A) கரடி (B) மான்
   (C) எருமை (D) பன்றி

2. 'எயினரின் இறையோன்' இத்தொடரில் 'எயினர்' என்பதன் பொருள் [ ]
   (A) வேடர் (B) அழகர்
   (C) நண்பர் (D) தலைவர்

3. 'வேழம்' என்பதன் இரு பொருள் [ ]
   (A) யானை, வேம்பு (B) யானை, வேங்கை
   (C) வேங்கை, கரும்பு (D) மூங்கில், கரும்பு

4. 'மாமலை பயந்த காமரு மணியும்' – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் தரும் பல சொற்கள் [ ]
(A) மாதிரம், கிரி, மடங்கல்
(B) மாதிரம், கிரி, புளகிதம்
(C) மாதிரம், கிரி, சைலம்
(D) மாதிரம், கிரி, எண்கு

5. 'அங்கண்' எனும் சொல் இவ்வாறு பிரியும் [ ]
(A) அ + கண்
(B) அங் + கண்
(C) அக் + கண்
(D) அம் + கண்

6. நன்மை + திறம் என்பது இவ்வாறு சேரும் [ ]
(A) நன்திறம்
(B) நற்றிறம்
(C) நல்திறம்
(D) நன்மைதிறம்

7. 'இருவினை' இத்தொனைச் சொல்லை விரித்துக் காண். [ ]
(A) உயர்திணை, அஃறிணை
(B) ஒருமை, பன்மை
(C) நல்வினை, தீவினை
(D) பெயரெச்சம், வினையெச்சம்

8. 'ஆராதனை' இப்பிறமொழிச் சொல்லிற்கு நிகரான தமிழ்ச்சொல் [ ]
(A) வழிபாடு (B) வாழ்த்து
(C) ஒப்பனை (D) நீராட்டு

9. 'துளிர்' – இவ்வழூஉச் சொல்லிற்கு திருந்தியச் சொல் [ ]
(A) தளிர் (B) நுனி
(C) துளி (D) துளிப்பு

10. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது [ ]
(A) நொச்சித் திணை
(B) காஞ்சித் திணை
(C) தும்பைத் திணை
(D) வாகைத் திணை

11. 'வேறொரு காட்டினிற் புகுக' – இத்தொடரில் 'புகுக' எனும் சொல்லின் இலக்கணக் குறிப்பு [ ]
(A) வினைத்தொகை
(B) வினையெச்சம்
(C) வியங்கோள் வினைமுற்று
(D) வினையாலணையும் பெயர்

12. 'விருத்தமா தவரை நோக்கி முறுவலன்' – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லிற்க இலக்கணக் குறிப்பு [ ]
(A) பண்புப் பெயர்
(B) உம்மைத் தொடர்
(C) உவமைத் தொடர்
(D) உரிச்சொற்றொடர்

13. 'செல்கின்றான்' இப்பகுப்பத்தின் இடைநிலை [ ]
(A) கிறு (B) கின்று
(C) செல் (D) ஆன்

14. பகுபதத்தின் மொத்த உறுப்புகள் [ ]
(A) ஆறு (B) ஐந்து
(C) நான்கு (D) இரண்டு

15. 'வெற்றிலை' என்பது இவ்விதியின் படி புணரும் [ ]
(A) ஆதிநீடல்
(B) இடையுகரம் இ ஆதல்
(C) இனமிகல்
(D) தன்னொற்று இரட்டல்

10. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது [ ]
(A) நொச்சித் திணை
(B) காஞ்சித் திணை
(C) தும்பைத் திணை
(D) வாகைத் திணை

11. 'வேறொரு காட்டினிற் புகுக' – இத்தொடரில் 'புகுக' எனும் சொல்லின் இலக்கணக் குறிப்பு [ ]
(A) வினைத்தொகை
(B) வினையெச்சம்
(C) வியங்கோள் வினைமுற்று
(D) வினையாலணையும் பெயர்

12. 'விருத்தமா தவரை நோக்கி முறுவலன்' – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லிற்க இலக்கணக் குறிப்பு [ ]
(A) பண்புப் பெயர்
(B) உம்மைத் தொடர்
(C) உவமைத் தொடர்
(D) உரிச்சொற்றொடர்

13. 'செல்கின்றான்' இப்பகுப்பத்தின் இடைநிலை [ ]
(A) கிறு (B) கின்று
(C) செல் (D) ஆன்

14. பகுபதத்தின் மொத்த உறுப்புகள் [ ]
(A) ஆறு (B) ஐந்து
(C) நான்கு (D) இரண்டு

15. 'வெற்றிலை' என்பது இவ்விதியின் படி புணரும் [ ]
(A) ஆதிநீடல்
(B) இடையுகரம் இ ஆதல்
(C) இனமிகல்
(D) தன்னொற்று இரட்டல்

16. கீழ்க்காணுபவற்றுள் வல்லினம் மிகா இடம் [ ]
(A) சுட்டெழுத்துகள் முன்
(B) ஓரெழுத்து ஒரு மொழியில்
(C) உம்மைத் தொகையில்
(D) இரண்டாம் வேற்றுமை விரியில்

17. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் இவ்வாறு முடிவது சிறப்பு [ ]
(A) ஆகாரத்தில் (B) ஏகாரத்தில்
(C) ஓகாரத்தில் (D) ஐகாரத்தில்

18. 'இடிப்பாரை' இச்சீரில் அமைந்துள்ள அசைகள் [ ]
(A) நிரை, நிரை, நேர்
(B) நேர், நிரை, நிரை
(C) நிரை, நேர், நிரை
(D) நேர், நேர், நிரை

19. இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது [ ]
(A) வஞ்சகப்புகழ்ச்சி அணி
(B) இரட்டுறமொழிதல் அணி
(C) பின்வரு நிலையணி
(D) தற்குறிப்பேற்ற அணி

20. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற. – இக் குறட்பாவில் அமைந்துள்ள அணி. [ ]
(A) பிறிது மொழிலணி
(B) தற்குறிப்பேற்ற அணி
(C) இரட்டுறமொழிதலணி
(D) சொற்பொருள் பின்வரு நிலையணி